# ஈழமணி

# EELAMANI

Registered as a newspaper in Ceylon. மலர்: 1 இதழ்: 10 11—1—1974. வெள்ளிக்கிழமை பக்கங்கள் — 8

20 சதம்


யாழ் மேயரின் விருந்தை

# அறிஞர்கள் பகிஷ்கரித்தனர்!

## பவனியில் சென்ற இருவர் மின்சாரத்துக்குப் பலியாகினர்!

யாழ்ப்பாணம், ஜன 10

யாழ்ப்பாண மேயர் திரு. அல்பிரட் துரையப்பா, தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வருகை தந்த வெளி நாட்டு அறிஞர்களுக்கு ஒழுங்கு செய்த விருந்தில் அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

சகல வெளிநாட்டு அறிஞர்களும் இந்த விருந்துபசாரத்தைப் பகிஷ்கரித்து விட்டனர் என்றும், மாநகர சபையைச் சேர்ந்த தமிழர் கூட்டணி உறுப்பினர்களும் இவ்விருந்தைப் பகிஷ்கரித்தனர் என்றும் எமது யாழ் நிருபர் அறிவிக்கிறார்.

ஆனால் மாநாட்டு அமைப்புக் குழு உறுப்பினர்களும், மற்றும் பல பிரமுகர்களும் விருந்தில் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில் மாநாட்டு கலாச்சார பவனியில் கலந்து கொண்ட மூவர்மீது மின் கம்பி அறுந்து விழுந்ததால் இருவர். ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அலங்கார ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதி வழியாக வந்தபோது இத்துரதிருஷ்ட சம்பவம் இடம் பெற்றது. மூன்றும் நபர் ஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலையில் இருந்தார்.

## ஈழக் குரல்

நாட்டில் குற்றச்செயல்கள் எவ்வளவு மோசமான நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு வெள்ளவத்தையில் நடைபெற்ற சம்பவம் ஒரு உதாரணமாகும்.

கணவன் இல்லாத போது பலாத்காரமாக வீட்டுக்குள் புகுந்த நான்கு 'பேர் அங்கிருந்த இளம் மனைவியை நிர்வாணமாக்கி, நகைகளைக் கொள்ளையடித்திருக்கிறார்கள். அப்போது வீட்டுக்கு வந்த கணவனையும் நிர்வாணமாக்கி அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அபகரித்திருக்கிறார்கள்.

மரியாதையான குடும்பம் அமைதியாக வாழ்வதற்கே வழியும் பாதுகாப்பும் இல்லாமல் போய் விட்டது.

அன்பே உருவான பௌத்த தர்மம் கடைப்பிடிக்கப்படும் நாட்டில், குற்றச் செயல்கள் மிகவும் இழிநிலைக்கு வந்து கொண்டிருப்பது வருந்தத் தக்கது.

குற்றங்களும், இதர காடைத்தனங்களும் கடுமையாக ஒடுக்கப்படாவிட்டால் அவை கட்டுமீறிப் போக வாய்ப்பு ஏற்பட்டு விடும்.

பெருகி வரும் குற்றங்களைத் தடுக்க கடுமையான சட்டங்கள் தேவை. பொலீசாரின் தீவிர கண்காணிப்பு மேலும் விஸ்தரிக்கப்படுதலும் அவசியம்.

அரசாங்கம் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தல் வேண்டும்.

## ஆங்கிலேயர் தமிழ்க் கச்சேரி

யாழ்ப்பாணம், ஜன. 10

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சம்பந்தமாக நடைபெற்ற கலை விழாவில் செவ்வாய்க்கிழமை இரவு இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர் ஜே. ஆர். மார் சுத்தத் தமிழில் சங்கீதக் கச்சேரி செய்தார்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் அவர், பட்டு சரிகை வேட்டி உடுத்தி, குங்குமப் பொட்டிட்டு அசல் சங்கீத வித்துவான் போல் காட்சியளித்தார்.

சுத்தானந்த பாரதியாரின் கீர்த்தனை யொன்றுடன் தனது கச்சேரியை ஆரம்பித்து சுமார் ஒரு மணித்தியாலங்களுக்கு மேடையில் அமர்ந்திருந்து பாடி எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றார்.

டாக்டர் மாரின் மகன் ஜூனியர் மார் தந்தையுடன் மேடையில் அமர்ந்திருந்து அவருக்கு சுருதி மீட்டினார்.

## அரசாங்கம் சுற்றறிக்கை

கொழும்பு ஜன, 10.

பெட்ரோல் பாவிப்பதை பாரதூரமாகக் குறைத்துக் கொள்ளும்படி எல்லா அரசாங்க இலாகாக்களுக்கும் அரசாங்க திணைக்களங்களுக்கும் திறைசேரி சுற்றறிக்கை ஒன்றை அனுப்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாரிகள் தங்கள் வழமையான பிரயாணத்தைக் கைவிட்டு அவசியமான பிரயாணத்தின் போது ரயில்களை உபயோகிக்குமாறு கோரப்படுவார்கள்.

## கவினுறுத் தோற்றம்



இது கோபமா? நாணமா? இந்தப் போஸ் எந்த வகையைச் சேர்ந்தது அதற்கு நடிகை ஜெயலலிதாவைத் தான் கேட்க வேண்டும்.

## "தமிழகத்திலும் இல்லாத மொழிப்பற்று இங்கே"

### யாழ் மக்களுக்கு திருச்சி முஸ்லிம் அறிஞர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜன 10

"யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு தம்மொழிமீது உள்ள ஆர்வத்தைப்போல தமிழகத்தில் கூடக் காண முடியாது."

இவ்வாறு திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவரும் முஸ்லிம் அறிஞருமான ஜனாப் சி. நயினார் முகமது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துகொண்டு பேசும் போது தெரிவித்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் அன்றுமாலை நடைபெற்ற கலை விழா நிகழ்ச்சிகளில் அவர் மேலும் கூறியதாவது: "தமிழ் ஆர்வம் மிக்க யாழ்ப்பாணத் தமிழர், தமிழுக்கு அருமையான தொரு விழா எடுத்திருக்கிறார்கள். இதைக்கண்டு பூரிப்படையாதவர் யாருமே இருக்கமுடியாது"

சபையின் முன்வரிசையில் வீற்றிருந்த தமிழர் கூட்டணித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைப் பார்த்து "தனிப்பெரும் தமிழர் தலைவரே" என்று தனது பேச்சை ஆரம்பித்த அவர் பாரதியும் பாரதிதாசனும் தமிழர் பெருமைபற்றி பாடிச் சென்றார்கள். அதை நேரில்காணும் வாய்ப்பை யாழ்ப்பாணத்தில் நான் இன்று பெற்றேன். யாழ்ப்பாண மக்கள் தமது அன்பாலும் பண்பாலும் அன்று அவர்கள் பாடிச் சென்றதை இன்று நிரூபித்து விட்டார்கள்.

தமிழன் பெருமை இவ்விழாவினால் மேலும் சிறப்படைந்துள்ளது என்றார்.

## அனுராவின் யாழ். விஜயம்



திரு. அனுரா ...ண்டாரநாயகா யாழ்ப்பாணத் ...துக்கு மேற் கொள்ள இருக்கும் விஜயம் அரசாங்க சார் ...னது அல்ல என்றும், எழு...சி பெற்று வரும் இளைஞர்களின் தலைவர் என்ற முறையில் தனிப்பட்ட முறையிலேயே அவர் இந்த விஜயத்தை மேற் கொள்வதாயும் "ஈழமணி"க்குத் தெரிய வருகிறது

அரசாங்க சார்பிலோ அல்லது எந்த அரசியல் கட்சியின் சார்பிலோ அவர் இந்த விஜயத்தை மேற கொள்ள வில்லை. தனிப்பட்ட முறையில் தேசிய உணர்வினால் உந்தப்பட்ட நிலையிலேயே அவரது விஜயம் இடம் பெறுகிறது என்றும் "ஈழமணி" அறிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### துப்பாக்கிச் சூட்டில் மரணம் - 1, படுகாயம் - 2

# கொள்ளைக் கும்பலுடன் பொலிஸார் மோதல்

## பலத்த போராட்டத்தில் களவர் கூட்டம் சரண்

தங்காலை, ஜன 10

**தங்காலைப் பகுதியில் வீடு புகுந்து களவாடிய ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்துக்கும் பொலிசாருக்கும் இடையில் சினிமாப்பாணியிலான சூட்டுச்சண்டை ஒன்று நடைபெற்றது.**

"டிமீல் டுமீல்" என்ற துப்பாக்கி அதிர் வேட்டுச் சண்டையில் கொள்ளையர் கோஷ்டியில் ஒருவர் மரணமானர்.. மற்றும் இருவர் பலத்த காயங்களுக்கு உட்பட்டனர். இன்னும் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளைக் கோஷ்டியில் மரணமான நபர் ஏப்ரல் கலவரங்களின் போது கைது செய்யப்பட்டு விடுதலையானவர் எனக் கூறப்பட்டது.

இந்தப் பரபரப்பூட்டும் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது,

தங்காலை வலஸ்முல்லை பகுதியில் உள்ள டபிள்யூ. எச். குணதாச என்பவரின் வீட்டினுள் புகுந்து ஆயுதம் தாங்கிய எட்டுப் பேர் அடங்கிய பயங்கரக் கோஷ்டி ஒன்று கொள்ளை அடித்தது.

இச் சமயம் பொலீசாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் வலஸ்முல்லை பொலீசைச் சேர்ந்த சார்ஜன்ட் சம்சுஉன் தலைமையில் 13 பேர் ஆயுதம் தாங்கிய பொலீஸ் கோஷ்டி ஒன்று கொள்ளை நடந்த வீட்டை நோக்கிச் சென்றது.

கொள்ளையர் கோஷ்டி கொள்ளை அடித்த பொருட்களுடன் வீட்டை விட்டு வெளியேறுகையில் வீட்டை முற்றுகையிட்டு நின்ற பொலீசார் அவர்களைச் சரணடையும்படி கேட்டனர்.

கொள்ளையர் கோஷ்டியினரோ பொலீசாரின் எச்சரிக்கையை அசட்டை செய்து பொலீசார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து பொலீசாரும் கொள்ளையர் கோஷ்டியை நோக்கிச்சுட்டனர். இரு தரப்பிலும் சினிமாப் பாணியில் துப்பாக்கிச் சண்டை சிறிது நேரம் நடைபெற்றது.

சண்டை முடிவில் கொள்ளையர் கோஷ்டியில் ஒருவர் மரணமானர். மரணமான நபர் அண்மையில் நடைபெற்ற பயங்கரவாத சம்பவங்களின் போது கைது செய்யப்பட்டு பின் விடுதலையானவராம். இவரை விட பிரஸ்தாபத் துப்பாக்கிச் சண்டையால் கொள்ளையர் கோஷ்டியில் இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

## கோஷ்டிச் சண்டை ஒருவர் மரணம்

இரக்குவானை ஜன. 10.

கொலன்ன தொகுதியைச் சேர்ந்த இரண்டு கிராமங்களில் இரு கோஷ்டிகளுக்கிடையே இரவு நேரத்தில் நடைபெற்ற மோதலின் போது ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தார். இரண்டு பேர் படுகாயமுற்று இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இது சம்பந்தமாக கொலன்ன பொலிசார் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன 10

ஏப்ரல் கலவரங்களின் போது தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை வழங்குமாறு இலங்கை ஆசிரியர்கள் சங்கம் கல்வி அமைச்சைக் கோரியுள்ளது.

கலவரகாலத்தில் கைது செய்யப்பட்ட சில ஆசிரியர்கள் பொலீஸ் விசாரணைகளின் பின் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் அதன் பின் இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டு கடந்த ஜூன் மாதம் மறுபடியும் இவர்களில் சிலர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதாகவும் ஆசிரியர் சங்கம் கூறுகிறது.

## இன்ஸ்பெக்டர்கள் பதவி உயர்வு

கொழும்பு ஜன, 10,

கடந்த 29ம் திகதி முதல் ஏழு பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் பிரதம இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் ஆர். டி. பிரேமதாஸ, எஸ். அரசரட்ணம், ஏ. பீட்டர்ஸ், கே. ஆர். எஸ். குறுப்பு, ஆர். எப். டி. வீரசிங்க, டப்ளியு. எம். தஸநாயக்க, வி. ஆர். வி. வேலு ஆகியோரே இந்த ஏழு பேருமாவர்.

## பாக் மாணவர் குழப்பம்

ராவல்பிண்டி, ஜன 10

நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் ரயில்கள் தாமதித்து வருவதை ஆட்சேபித்து ரியாணாபாத் ரயில் நிலையத்தில் குழப்பம் விளைவித்தனர்.

ரயில் ஒன்றை நிறுத்தி அதற்கு அவர்கள் சேதம் விளைவித்தனர் ரயில்நிலையம், [illegible] ஆகிய வற்றையும் [illegible]னர்.

8 மாணவர் கைது செய்யப்பட்டனர்.


## இன்றைய சினிமா

கிங்ஸ்லி
**வெகுளிப் பெண்**

கெப்பிடல்
**சொர்க்கம்**

ரீகல்
**சொர்க்கம்**

மைலன்
**வேலைக்காரன்**

செல்லமகால்
**ஆனந்த ஜோதி**

கெயிட்டி
**நவாப் நாற்காலி**

சென்ட்ரல்
**பட்டிக்காடா பட்டணமா**

நவா
**தேன் நிலவு**

ஜெஸீமா
**அவள்**


## பெட்ரோலிய பிரச்சினையால் 10 லட்சம் பேர் வேலை இழப்பு

லண்டன் ஜன. 10.

அரபு நாடுகளின் பெற்றோலியக் குறைப்பினாலும், சுரங்கத் தொழிலாளர்களின் வேலை குறைப்பினாலும் ஏற்பட்டுள்ள மின்சார பிரச்சினையினால் இங்கிலாந்தில் சுமார் பத்து லட்சம் தொழிலாளர் வேலை இழந்துள்ளதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

சுரங்கத் தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சம்பளப் பிரச்சினையை முன் வைத்து நடந்து வரும் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்டுள்ளதால் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் பிரதமர் திரு. ஹீத் இராஜினாமாச் செய்ய இடமுண்டு எனவும் செய்திகள் கூறுகின்றன.

தொழிற் சங்கங்களா, அரசாங்கமா நாட்டை நடத்த வேண்டுமென பொது மக்கள் தேர்தலில் வாக்களித்துத் தீர்மானிக்க வேண்டுமென இங்கிலாந்தில் உள்ள அரசியல்வாதிகள் கூறுகின்றனர்.

நாட்டை தற்சமயம் எதிர் நோக்கியுள்ள பொருளாதார கைத்தொழில் பிரச்சினைகளை முன் வைத்து மந்திரி சபையில் சிறு மாற்றங்கள் செய்யப்பட்டன.

இப்போது இருக்கும் நிலைமைக்கு முக்கிய காரணம் அரபு நாடுகள் பெட்ரோலிய விஷயத்தில் கைக்கொள்ளும் நடவடிக்கையே காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பாதுகாப்பு அமைச்சர் காரிங்டன் பிரபு இங்கிலாந்தின் புதிதாக அமைக்கப்பட்ட எண்ணெய், கனிப்பொருள் மின்சக்தி அமைச்சுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**கள்ளக் குடியேற்றக்காரர்**

## படகு கவிழ்ந்ததால் 163 இந்தியர் மரணம்

பம்பாய், ஜன. 10

மேற்கு ஆசியாவிலுள்ள ஷாராஜ் என்ற இடத்துக்கு கள்ளத்தனமாகக் குடியேறி மீண்டும் சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்பட்ட 163 இந்தியர்கள் அவர்களை ஏற்றிச் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்ததால் மாண்டனர்.

துபாய்க் கடலில் மேற்படி சம்பவம் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஷயத்தில் தப்பிய 152 பேர் துபாயில் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். மேற்கு ஆசியாவுக்கு இவ்வாறு குடியேறியவர் கேரளாவைச் சேர்ந்தவர்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரு வாரங்களுக்கு முன் நடைபெற்ற இந்த விபத்து பற்றி மிகவும் பிந்தியே செய்தி கிடைத்தது. விபத்தில் தப்பிய 30 பேர் ஒன்று சேர்ந்து கேரள முஸ்லீம் சங்கத்தினருக்கு அனுப்பிய கடிதமொன்றின் மூலமாக இதுபற்றிய தகவல் கிடைத்துள்ளது.

315 இந்தியர்கள் பம்பாயிலிருந்து துபாய்க்குச் சென்றதாகவும், அவர்களிடம் உத்தியோகபூர்வமான பிரயாணப் பத்திரங்கள் இல்லாமையினால் ஷாராஜில் வைத்து இவர்களைப் பிடித்த அதிகாரிகள் இவர்களை சிறையில் இட்டதாகவும் கூறப்படுகிறது.

துறையிலுள்ள இந்திய ஸ்தானிகராலயம், இவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என உறுதிப்படுத்த சாட்சியங்கள் இல்லாமையினால் இவர்களை பொறுப்பேற்க மறுத்தது.

அரைவாசிப் பேர் கடலில் மூழ்கியபின் மிகுதி இருந்தோர் தூரத்தில் சென்றுகொண்டிருந்த கப்பல் ஒன்றுக்குச் சைகைகாட்டி அதன் உதவியுடன் கரையேறியுள்ளனர்.

## பார்த்தெழுதிய மாணவர் இம்முறை தப்ப முடியாது

கொழும்பு ஜன. 10

கடந்த மாதம் நடைபெற்ற கல்வி பொது சாதாரண பரீட்சையில் பார்த்து எழுதி, பரீட்சை மண்டபத்தில் பிடிபடாது தப்பிய மாணவர்கள் தாங்கள் சாமர்த்தியசாலிகள் என நினைத்தால் அது பெருந்தவறு என்பதை விரைவில் உணர்ந்து கொள்வர்.

தற்சமயம் விடைத் தாள்களைத் திருத்தி வரும் சுமார் 10, 000 ஆசிரியர்களுக்கு பரீட்சைக் கமிஷனர் திரு. போகொட பிரேமரத்தின பார்த்தெழுதிய மாணவர்களைப் பிடிப்பதற்கு கையாள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிவித்துள்ளார்.

ஒரு பாடத்துக்கான விடை இரண்டு பேருடைய விடைத் தாள்களில் ஒரே கையெழுத்தில் எழுதப்பட்டிருந்தால் அதுபற்றி தனியாகப் பரீட்சைப் பகுதிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

மற்றைய நடவடிக்கைகள் பின் வருமாறு:

ஒரே மாதிரியான விடைகள், ஒரே மாதிரியான மொழி பாவிக்கப்பட்டிருத்தல், எண் கணிதம், தூயகணிதம் போன்ற பாடங்களில் ஒரே மாதிரியாகக் கணக்குகள் செய்யப்பட்டிருத்தல்.

ஒருவருடைய கையெழுத்து வெவ்வேறான விடைத் தாள்களில் இருத்தல்.

விடைத் தாள்கள் பலமுறை மடிக்கப்பட்டிருத்தல்.

பிழையான தேதியிடப்பட்டு பரீட்சை மேற்பார்வையாளரின் கையெழுத்தில்லாத விடைத்தாள்கள்.

ஒரே சுட்டிலக்கத்தைக் கொண்ட பரீட்சார்த்தியின் வெவ்வேறான விடைத்தாள்களில் மாறுபட்ட கையெழுத்துக்கள்.

மேற்கூறிய சந்தேகத்துக்கிடமான விடைத்தாள்கள் பற்றி பரீட்சைப்பகுதிக்கு அறிவிக்கப்பட்டு அது பற்றி விசாரணை நடத்தப்படும் என திரு, பிரேமரத்தின கூறினர்.

## தங்கையுடன் தகராறு தற்கொலையில் முடிவு

பதுளை, ஜன 10

சோறு பரிமாறுவதில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் குடும்பத்தில் மூத்த பெண் ரண்பக் என்ற பூச்சி மருந்தை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார்.

தம்பாள்வலை மரண விசாரணை அதிகாரி எச். எம். குணசேகர இம்மரணம் பற்றி விசாரணை நடத்தினர்.

எல்ல பொலிஸ் பகுதி கஞகல்லை [illegible]யைச் சேர்ந்த ரெங்கசாமி, அழகம்மா என்ற பெண்ணே இவ்வாறு மாண்டதாக மரண விசாரணையில் கூறப்பட்டது.

ரெங்கசாமி என்பவர் சாட்சியம் அளிக்கையில் சொன்னதாவது.

இறந்த பெண் என் மூத்த மகள். அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் சோறு சாப்பிடுகையில் தகராறு ஏற்பட்டது. சிறிது நேரத்தில் என் மூத்த மகள் வாந்தி எடுத்தாள். அவள் "ரண்பக்" பூச்சிமருந்தை குடித்துவிட்டாள் என பின்னர் அறிந்தோம்

மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜெனீவா பேச்சு 15ம் திகதி ஒத்திவைக்கப்பட்டது

ஜெனீவா, ஜன 10

படை விலக்கம் சம்பந்தமான பேச்சுக்களை இஸ்ரேலும் எகிப்தும் 6 தினங்களுக்கு ஒத்திவைத்துள்ளன. அதே சமயம் இப்பிரச்சினை சம்பந்தமான இஸ்ரேலின் யோசனை குறித்து ஜெரூஸலத்திலும், கெய்ரோவிலும் அரசியல் முடிவுகள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன.

ராணுவப் பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள ஸ்தம்பிதம், மத்திய கிழக்கு சமாதான மாநாடு சம்பந்தமான முழுத் திட்டத்தையும் தாமதப்படுத்தலாம் எனத் தெரிகிறது. சமாதான மாநாடு ஜனவரி மத்தியில் தூதர்கள் அந்தஸ்தில் ஆரம்பித்து, ஜனவரி 21ல் மந்திரிகள் மட்டத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

எனினும் ஜெனீவா பேச்சுக்களை தீவிரப்படுத்தும் வகையில் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. கீஸிஞ்சர் கெய்ரோவுக்கும் ஜெரூஸலத்துக்கும் சூறுவளி விஜயம் ஒன்றை மேற் கொள்ளவிருக்கிறார்.

கீஸிஞ்சர்-டயான் பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற இஸ்ரேல் திட்டப்படி, இஸ்ரேல் படைகள் சினாயிலுள்ள கேந்திர கணவாய்களுக்கு வாபஸாகும். அதே சமயம் சூயஸ் கால்வாயில் எகிப்தியரின் தாக்குதல் பலம் குறைக்கப்படவேண்டும். சூயஸ் கால்வாயைத் திறக்க எகிப்து முன் வரவேண்டும். அழிந்து போன எகிப்தின் முன்னணி நகரங்கள் மீண்டும் செப்பனிடப்படும். இரு ராணுவங்களுக்குமிடையே ஐ. நா. துருப்புக்கள் தற்காலிக எல்லையாக இருக்க வேண்டும்.

எகிப்தின் அங்கீகாரம் இத்திட்டத்துக்கு இன்னும் கிடைக்கவில்லை. எகிப்திய வெளிநாட்டு மந்திரி திரு. இஸ்மாயில் பாஹ்மி இது பற்றி மாஸ்கோவில் விவாதிக்க இருக்கிறார்.

புதிய இஸ்ரேல் அரசாங்கமும் இத்திட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும்.

● அடுத்த சில தினங்களில் ஸ்ரீமதி கால்டா மேயர் புதிய மந்திரி சபையை அமைப்பார் என எதிர் பார்க்கப்படுகிறது.

கடந்த இரு வாரங்களில் எகிப்திய-இஸ்ரேலிய ராணுவ அதிகாரிகள் நேற்று 6வது தடவையாக சந்தித்துப் பேசினார்கள். ஒத்திவைக்கப்பட்டிருக்கும் இடைக் காலத்தில் இரு தூது கோஷ்டிகளின் தலைவர்களும் ஆலோசனைகளுக்காக தங்கள் நாட்டுக்குத் திரும்புவார்களா என்பது இன்னும் தெரியவில்லை. 15ம் திகதி அடுத்த கூட்டம் நடைபெறும்.

## நேட்டோ ஆயுதம் காணவில்லை!

பிரஸ்ஸல்ஸ், ஜன 10

நேட்டோ ராணுவத்தளங்களிலிருந்து தரையிலிருந்து வானத்திற்குச் செல்லும் ஏவுகணைகள் காணமற்போயிருப்பது குறித்து பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால் இத்தகைய ஆயுதங்களைத் தாங்கிய அராபிய கொரில்லாக்கள் தாக்குதல் எதையும் நடத்த முயல்வதாக தங்களுக்கு ஆதாரம் எதுவும் இல்லை என விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

எனினும் எல்லைகள் நெடுகிலும், விமான நிலையங்களிலும் பாதுகாப்புக்கள் நீடிக்கப்படும்.

## குவாய்த்தில் பாக் மந்திரி

இஸ்லாமாபாத், ஜன 10

பாகிஸ்தான் தகவல் மத விவகார மந்திரி திரு. மௌலானா கௌஸார் நியாஸி நாளை குவாய்த் வருகிறார்.

15 நாள் சவூதி அரேபிய விஜயத்திற்குப்பின் இங்குவரும் அவர் ஈராக்குக்கும் செல்வார்.

ஈராக்கிலுள்ள புனித ஸ்தலங்களுக்கு அவர் விஜயம் செய்வார்.

## எண்ணெய் வயல்களை அழிக்க தயாராகிறது!

### குவாய்த்தின் தீவிரப் போக்கு

குவாய்த், ஜன 10

குவாய்த், தன் எண்ணெய் வயல்களை எந்த நேரமும் நாசமாக்கத் தயாராக வெடி மருந்துகளை எண்ணெய் வயல்களைச் சுற்றிக் குவித்திருக்கிறது.

அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி திரு. ஜேம்ஸ் செல்சிஞ்சர் சமீபத்தில் விடுத்த பயமுறுத்தலை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

"அமெரிக்கத் தலையீடு ஏற்படுமானால் எண்ணெய் வயல்களை அழித்துவிடுவோம்" எனகுவாய்த் வெளிநாட்டு மந்திரி ஷேக் சபா அல் அஹ்மத் எச்சரித்தார்.

சவூதி அரேபியாவும், அல்ஜிரியாவும் இதுபோன்ற எச்சரிக்கைகளை விடுத்திருக்கின்றனர்.

"அமெரிக்கா பலாத்காரத்தை உபயோகிக்கப் போகிறது என்ற முதல் அறிகுறி தென்பட்டவுடனேயே குவாய்த்தின் எண்ணெய் வயல்கள் அழிக்கப்படும். வெளிநாட்டுப் பயமுறுத்தலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள எந்த நாட்டுக்கும் உரிமை உண்டு என்றார் ஷேக் சபா.

அராபியாகளுக்கு உணவுப் பொருள் ஏற்றுமதியை முன்னேற்ற நாடுகள் நிறுத்திவிடலாம் என அமெரிக்க உபஜனாதிபதி விடுத்துள்ள எச்சரிக்கை பற்றிக் கேட்டதற்கு, "உள்நாட்டு உணவு உற்பத்தியில் ஈடுபட அப்போது அராபியர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்" என்றார் ஷேக்.

உதவி ஜனாதிபதி திரு. போர்டின் எச்சரிக்கை எங்களைப் பயமுறுத்தாது. இஸ்ரேலியர் அரபுப் பகுதிகளிலிருந்து முற்றாகவாபஸ் பெற்று, பாலஸ்தீனியர்களின் அடிப்படை உரிமை நிலைநாட்டப்படும்வரை அராபியர்கள் அமெரிக்காவுக்கு முன்பு ஏற்றுமதிசெய்த அளவில் எண்ணெய் ஏற்றுமதி செய்யமாட்டார்கள் என்றும் குவாய்த் மந்திரி கூறினார்.

## சாரதிகள் கோரிக்கை!

ஒவ்வொரு டாக்ஸி சாரதியும் தினமும் 4 கலன் பெட்ரோலை பழைய விலைக்கு வாங்க ஒழுங்கு செய்து தர வேண்டும்"

டாக்ஸி சாரதிகள் இந்த வேண்டுகோளை அரசாங்கத்துக்கு விடுத்திருக்கிறார்கள்.

இவ்விஷயமாக பிரதமரையும், அவரது மந்திரிகளையும் பேட்டி கோரியிருக்கிறார் ஸ்ரீ லங்கா ஜனதா டாக்ஸி சாரதி யூனியன் தலைவர் திரு. தர்மசிரிவர்த்தன.

## எண்ணெய் நெருக்கடி பொலீசாருக்கு இல்லை

தற்போதைய எண்ணெய் நெருக்கடி குற்றத்தடுப்பையோ, பொலீசாரின் இதர நடவடிக்கைகளையோ பாதிக்காது.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்டான்லி சேனநாயகா நேற்றுக் காலை உயர் பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட மகாநாடு ஒன்றை நடத்தி நிலைமை பற்றி ஆலோசித்தார்.

பெட்ரோல் பற்றுக்குறையினால் பொலீஸ் ரோந்துக்காரர்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்படமாட்டா என்றும், இதர அவசரகால பொலீஸ் நடவடிக்கைகளையும் அது பாதிக்காது என்றும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் குறிப்பிட்டார்.

உணவுப் பொருள் திருட்டுக்களைத் தவிர்க்குமுகமாக அரசாங்க உணவுக் குதங்கள், நெல்வயல்கள், கூட்டுறவுக் கடைகள், பண்ணைகள் ஆகியன பாதுகாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

திருட்டுக்களும், கொள்ளைகளும் அதிகரித்து வரும் நிலையில் பொலீசாரின் நடவடிக்கை தளர்த்தபடமாட்டாது என்றும் ஐ. ஜீ. பி. குறிப்பிட்டார்.



எண்ணெய் நெருக்கடி ஒரு புறம் வளர்ச்சியடையும் அதே சமயம் புதிய விமானங்களுக்கான ஆர்டர்களும் குறையவில்லை. இதோ! பல விமானக் கம்பெனிகளுக்கு அனுப்பப்படவிருக்கும் விமானங்கள் பரிசோதிக்கப்பட்டு புறப்படத் தயாராய் உள்ளன.

## சீர்திருத்தமே பெரியார்கொள்கை

''கலைஞர்கள் வெறும் கூத்தாடிகளாக இல்லாது சமுதாய சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்டு தமது கலைப் பணியைச் செய்யவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார் பெரியார். பல புதுமையான போராட்டங்களின் மூலம் ஊழல்களைக் களைந்தெறியவும் சாதி, மத, உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடுகளற்ற சமுதாயத்தை உருவாக்கவே பெரியார் அல்லும் பகலும் தனது 95 வயது வரையில் உழைத்தார்."

மருதானை லொக்கேட் லேனில் இலங்கை அண்ணா தி. மு. க. ஆதரவில் நடந்த பெரியார் இரங்கற் கூட்டத்தில் அகில இலங்கை எம். ஜீ. ஆர். மன்றப் பொதுச் செயலாளர் ஜனாப் எ நெய்னார் தலைமை வகித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் பெரியார், குணசித்திர நடிகர் நாகையா ஆகியோர் மறைவு குறித்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## இந்தியா - வங்காளம் மூன்று நாள் பேச்சு

### அகதிகள் பிரச்சினை பற்றி

டாக்கா, ஜன 10

இந்தியாவுக்கும் வங்காள தேசத்திற்குமிடையே நடைபெற்ற மூன்றுநாள் மகாநாட்டின் முதல்கூட்டம் நேற்று முடிவுற்றது.

பாகிஸ்தானியர்களையும், வங்காளிகளையும் பரஸ்பரம் அவரவர் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பும் விஷயம்குறித்து இம்மகாநாட்டில் ஆராயப்பட்டது.

இவ்விஷயத்தில் கடந்த சில மாதங்களாக ஏற்பட்ட கஷ்டநிலை பற்றி விவாதிக்கப் பட்டதாயும், சீராகவும், துரிதமாகவும் மக்களைத் திருப்பி அனுப்புவது பற்றிய வழிவகைகள் ஆராயப்பட்டன என்று பங்களாதேஷ் வெளிவிவகார டைரக்டர் ஜெனரல் திரு. அப்துல் ஆர்ஸன் கூறினார்.

இவ்விஷயத்தில் என்னகஷ்டம் ஏற்பட்டது என்பதை அவர் குறிப்பிடவில்லை.

இந்திய வெளிநாட்டு மந்திரி திரு. சுவரண்சிங் தலைமையிலான ஐவர் கோஷ்டி நேற்று டாக்காவந்தது.

வங்காளதேசத்திலுள்ள பீகாரிகளை ஏற்றுக்கொள்வதில் பாகிஸ்தானியர் காட்டும் மனோநிலை குறித்து வங்காளதேசம் குற்றம் சாட்டியுள்ளது.

டாக்காவிலிருந்து பாகிஸ்தான் செல்லும் விமானங்களில் பாதி காலியாக இருக்கின்றன என்றும் அது மேலும் கூறியது.

## நிக்ஸன்

சென் கிளமெண்ட், கலிபோர்னியா, ஜன 10

ஜனாதிபதி நிக்ஸன் 'வாட்டர் கேட்' ஊழல் விஷயமாக தனது நிலையை மேலும் புதிதாக விளக்குவதற்கு எதுவும் இல்லை என வெள்ளை மாளிகை அறிவித்தது.

தனது நிலையை நாட்டுக்குத் தெரிவித்து விட்டதாக திரு நிக்ஸன் நம்பிக்கையுடன் இருக்கிறார்.

## ஜப்பான் பிரதமர்

பாங்காக், ஜன 10

ஜப்பானிய பிரதம மந்திரி தனக்கா இன்று தாய்லந்தில் தமக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த மாணவர் தலைவர்களைச் சந்திக்கிறார்.

பிரதமர் சன்யா தர்மசக்தியுடன் பேச்சு நடத்திய பின் அவர் 10 மாணவர் தலைவர்களைச் சந்திப்பார்.

## பிரதமரின் இந்திய விஜயம்

வருகிற 22-ம் திகதி இந்தியா செல்லும் பிரதமர் சிறிமாவோ வருகிற 26ம் திகதி இடம் பெறவிருக்கும் இந்திய குடியரசு தினக் கொண்டாட்டத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## கீஸிஞ்சர்

சென்கிளமெண்ட், ஜன 10

மத்தியகிழக்குக்குச் செல்லும் டாக்டர் கீஸிஞ்சருடன் திரு எல்ஸ்வேர்த் பங்கர், உதவி வெளிநாட்டு மந்திரி திரு. ஜோஸப் ஸிஸ்கோ உட்பட பலர் செல்கிறார்கள்.

எகிப்திய இஸ்ரேலிய படை விலக்கம்பற்றி ஒரு உடன்பாடு காணமுடியும் எனக் கூறிய கீஸிஞ்சர், இது சாத்தியமா என்பது இம்மாதம் தெரிந்துவிடும் எனக் கூறினார்.

வாஷிங்டனிலிருந்து புறப்படுமுன் டாக்டர் கீஸிஞ்சர் நிருபர்கள் மகாநாடு ஒன்றை நடத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இஸ்லாமிய பாரம்பரியம்

# மதச் சார்பற்ற அரசு

لَكُمْ دِينُكُمْ وَلِيَ دِينِ

(8)

"உனக்கு உன் மதம், எனக்கு என்மதம்" என வரும் அல்குர்ஆன் வசனம் ஒரு தெளிவினை நமக்கு ஏற்படுத்தவல்லது. இஸ்லாத்திலே ஈமான் கொள்ளாதவர்களைப் பார்த்து முஸ்லிம்கள் சொல்லத்தக்கது என்ன?

நான்வணங்குவது நீ வணங்குவதை அல்ல; நான் வணங்குவதை நீ வணங்குவதுமில்லை; நீ வணங்குவதை நான் வணங்கவும் மாட்டேன். நான் வணங்குவதை நீ வணங்க வேண்டுமென்பதுமில்லை.

இந்தச் சங்கையான ஏற்பாட்டினை முஹம்மது நபி (ஸல்) அவர்களும், அவர்தம் உடனடித் தோழர்களும் பின்பற்றினார்கள்.

நாம் அனுப்பிய இறைதூதர் சிலரைப் பற்றி உமக்குக் குறிப்பிட்டுள்ளோம். வேறுசில இறைதூதர் பற்றி உமக்குக் குறிப்பிடவில்லை" (40:78) "இறைவனை வணங்குவதற்கும், தீமையை விலக்குவதற்கும் ஒவ்வொரு மக்கள் மத்தியிலும் ஒரு தூதரை அனுப்பினேன். (14:37)



மௌலானா அபுல் கலாம் ஆஸாத் "தர்ஜுமானுல் குர்ஆன்" என்னும் தம் திருக்குர்ஆன் வியாக்கியான நூலிலே இதனைத் தெளிவுபடுத்துகின்றார். ஒரு மதத்திற்கும் இன்னொரு மதத்திற்குமுள்ள வித்தியாசம் தீன் அல்லது மதத்தின் ஆன்மா சம்பந்தப்பட்டதல்ல; இறைவழிபாட்டிலே புகுந்துள்ள வெளிச்சடங்குகள் சம்பந்தமான வித்தியாசங்களே உள்ளன என மௌலானா ஆஸாத் கருதுகின்றார். "ஒவ்வொரு மக்களுக்கும் அவரவர் நியமித்துள்ள வணக்க முறைகளை நான் நியமித்துள்ளோன். எனவே, அவர்கள் இந்த விடயத்தில் உம்முடன் தர்க்கிக்க வேண்டாம்," (22:66) என்ற அல்குர்ஆன் வாக்கியத்தினைத் தமது கூற்றுக்கு மௌலானா ஆஸாத் ஆதாரமாகக் கையாளுகின்றார்.

இறைவனாலே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் என்ற கருத்தலைதனை அல்குர்ஆன் நிராகரிக்கின்றது. "யூதர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் தவிர்ந்த யாரும் சுவர்க்கத்தை அடைய முடியாது. இவை அவர்களுடைய வீணான ஆசையாகும்." (2:105) சரியானவற்றைச் செய்து கொண்டு இறைவனிடம் எவரொருவன்சரணடைகின்றானோ அவனுடைய பரிசு இறைவனிடம்" (2:106) "ஞானம், நியாயம், முழுமையான போதனை" (16:125) ஆகியன பற்றிய தர்க்க வியாக்கியானம் அனுமதிக்கப்படலாம். "மற்றவர்களை அவதூறு அல்லது அவமதிப்பு" செய்தல் அனுமதிக்கப்படலாகாது. இவை அனைத்தும் இஸ்லாம் மற்றைய மதத்தினர் மாட்டுக்கடைப்பிடிக்க வேண்டிய சகிப்புத் தன்மையையே வலியுறுத்துகின்றன.

ஆனாலும், இறைவனின் ஏகத்துவம் பற்றிய கருத்துவத்திலே அல்குர்ஆன் எந்த வகையிலும் கண்டிப்பாக உள்ளது. ஏக இறைவனுடன் மற்றும் கடவுளர்களை இணைத்து வழிபடுதல் அறியாமை சார்ந்தது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இறைவனால் இறக்கப்பட்ட எந்த நூலாகிலும் நான் நம்புகிறேன். உங்கள் மத்தியிலே நியாயமானதைத் தீர்மானிப்பதற்கு நான் பணிக்கப்பட்டிருக்கின்றேன். இறைவனே உங்களுக்கும் மேலானவன்; எங்களுக்கும் மேலானவன். எங்களுக்கு எங்கள் பணிகள் இருக்கின்றன; உங்களுக்கு உங்கள் பணிகள் இருக்கின்றன. உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் எந்தப் பிணக்கும் இருக்க வேண்டாம். நம் எல்லோரையும் இறைவன் ஒன்று படுத்துவான்; அவனிடமே நாம் சென்றடைவோம்" (42:13-14) இந்த வகையிலே தான் மக்களை இஸ்லாத்திற்கு அழைக்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) நெறிப்படுத்தப்பட்டார்கள்.

மதமாற்றத்திலே நிர்ப்பந்தம் இருத்தலாகாது என மட்டும் பெருமானார் அறிவுறுத்தப்படவில்லை. "உம்மைப் படைக்கப்பட்ட சகலவற்றிற்கும் ஓர் அருட்கொடையாகவே அனுப்பிவைத்தோம்" எனவும் அறிவுறுத்தப்பட்டார்.

"கொலைகாரர்களுடைய அட்டூழியங்களிலோ, மதவெறியர்களுடைய கோபச்செயல்களிலோ நாம் இஸ்லாத்தின் மேன்மைத்தொண்டுகளைத் தேடலாகாது. ஒரு கையில் வாளும் மறு கையில் குர்ஆனும் கொண்டு சென்றதாகக் கற்பனையில் எழுந்த முஸ்லிம் போர் வீரனின் நடவடிக்கையும் அத்தகையதே. உலகின் மூலை முடுக்கெல்லாம் இஸ்லாத்தின் மேன்மையை எடுத்துச்சென்ற மதபோதகர்களும் வியாபாரிகளும் ஆற்றிய சேவைகளிலிருந்தே இஸ்லாத்தின் பெருமையை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்" என்று ரி. டபிள்யு. அர்னோல்ட் என்னும் வரலாற்று நூலார் எழுதி வைத்துள்ளது நமது மனத்தில் இருத்தத் தக்கது.

"முஸ்லிம்களுடைய உலக சகோதரத்துவம்" என்னும் கோஷத்தை மீள் பார்வை செய்ய வேண்டிய உலக நிகழ்ச்சிகளின் சந்தியிலே நாம் நிற்கின்றோம்.

**இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்**

## புதிய தொடர் - அடுத்த வாரம்

விறு விறுப்பான கொலை வழக்கு ஒன்றைத் தொடராகத் தந்த "ஈழமணி" தனது வாசகர்களுக்குத் தொடர்ந்து மேலும் புதிய தொடர்களை அளிக்க விருக்கிறதென்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

இந்த வரிசையில் எமது புதிய தொடர் அடுத்த வாரம் வெளி வரும். படிக்கத் தவறாதீர்கள். உங்கள் பிரதிகளுக்கு இன்றே சொல்லி வையுங்கள்.




### அழகியால் விளைந்த

# கொலையாளி

ஜயதேவ் கௌர் அழகியும் ... தும் அவளது தகாத தொட... ளது புதிய காதலனை சர... னிலையில் இருட்டில் உருவம்... கொலை செய்யப்படுகிறான். ... னாகிய பகவத் சிங்கின் ஆ... கொண்டு பொலிசில் முறை... முறைப்பாட்டில் தன்னல் ... என்பவன் தான் இக் ெ... லாம் என்று கூறுகிறாள். இத... தது? பொலிசார் இக் கொ... துலக்கிக் கண்டு பிடித்தனர்? ... இன்று படித்துப் பாருங்கள்.

பொலிஸ் அதிகாரிகள் கௌரின வீட்டிற்கு விரைந்து சென்றனர். அங்கு சரண்சிங்கின் பிரேதத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அத்துடன வீடு முழுவதும் துளாவித் துளாவிச் சோதனை போட்டார்கள். அவர்களது முயற்சிக்குப் பலன் ஓரளவு இடைத்தது.

இரத்தக் கறை படிந்த ஒரு சட்டை பொலிஸ் கைகளில் சிக்கியது. அவர்கள் உடன் அந்தச் சட்டையைச் சோதனை போட்டார்கள். அச் சட்டையின் பைக்குள் இருந்து இரத்தக் கறை படிந்திருந்த கடிதம் ஒன்றை அவர்கள் எடுத்தனர். அந்தக் கடிதத்தில் கைரேகைகள் மிக நன்றாகப் பதிவாகியிருந்தன. பொலிசாரின் முகத்தில் ஓரளவு நிம்மதி தெரிந்தது. முக்கியமான தடயம் ஒன்று சிக்கிவிட்டதல்லவா?

கைரேகை நிபுணர் அழைக்கப்பட்டனர். பரிசோதனைகள் நடந்தன. அவற்றிலிருந்து பொலிசார் மிகத் தெளிவாக ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டனர். கௌர் தனது முறைப்பாட்டில் கபீர்சிங்கின் பெயரைக்கொடுத்திருந்த போதிலும், அது பொய்யாகக் கொடுக்கப்பட்டதாக அல்லது சும்மா கொடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்; இக் கொலைக்கும் கபீர்சிங்கிற்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்பதை அவர்கள் கண்டு பிடித்து விட்டனர்.

எனவே, மிகத் தீவிரமாகத் துப்புத் துலக்கத் தொடங்கினர். கௌருடன் தொடர்புடையவர்கள் யாரெல்லாம் என்று விசாரித்தனர். அந்தப் பட்டியலில் இருந்து அவளுடன் சமீப காலத் தொடர்புடையோர் பெயர்களைத் தெரிந்து எடுத்து, மிகவும் தீவிரமாகவும் துரிதமாகவும் துப்புத் துலக்கலாயினர்.

பொலிசாருக்கே அதிர்ச்சியாக பொலிஸ் சேவையிலுள்ள பகவத் சிங்கின் பெயரும் கௌருடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் பட்டியலில் காணப்பட்டது. இருந்தும், அவர்கள் தங்கள் விசாரணைகளை அவன் மீதும் திருப்பி விட்டனர். அவனை விசாரணைக்குட்படுத்தும் நோக்குடன் தேடத் தொடங்கினார்கள்.

பகவத்சிங்கை அவர்கள் அவன் பணி புரியும் புதுடெல்லி பொலிஸ் நிலையத்தில் விசாரித்தபோது அவன் அங்கு இல்லை என்பதைத் தெரிந்து கொண்டனர். லீவில் அவன் எங்கோ போயிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இப்போது பொலிசின் சந்தேகம் வலுத்தது. பகவத்சிங்கைத் தேடி பொலிஸ் வலை விரித்த அதே சமயம், அவர்களுக்கு மேலும் ஒரு துப்புக் கிடைத்தது. பகவத்சிங் கொலை நடந்த அன்று இரவு தயாள்பூருக்குச் சென்றிருந்தான் என்றும், அவன் புகை வண்டியில் திரும்பி வருவதைச் சிலர் கண்டார்கள் என்றும் தகவல் பொலிசாருக்குக் கிடைத்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு பொலிசார் தமது வலையை மிகவும் நீளமாக விரித்து விட்டனர்.

பொலிஸாரின் வலையில் சிக்காமல் தப்பியிருந்த பகவத் சிங், அவர்களுக்கு இனியும் அதிகம் சிரமம் கொடுக்கக் கூடாது என்று எண்ணியோ என்னவோ தன் சொந்தக் கிராமத்துப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தான்; சரண்சிங்கைத் தானே கொலை செய்ததாக ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றையும் கொடுத்தான்.

பொலிஸாரின் வேலைகள் முடிவடைந்தன. உடன் பகவத் சிங்கிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய ஏற்பாடுகளை மேற்கொண்டனர். 1958ஆம் ஆ... வரி மாதம் வழக்கு... தொடக்கலாயிற்று.

தன் காதலில் பே... னால் எழுந்த பொறு... மாகத் தான் சரண்சி... வத் சிங் கொலை... அவன் மீது பொலிஸ்... சாட்டினர்.



பொலிஸார் தம... சாட்சிற்கு ஆ... கொலைக்கு முன்பும்... பகவத் சிங்கின் நடவ... நடமாட்டங்கள் ஆ... பார்த்தவர்களது ச... யும், இரத்தக் கறை ... டையில் கிடந்த கை... னது கைரேகைதா... ரேகை நிபுணரின் ... ஆகியவை அனைத்தும் ... எதிராக மலை போல ... இவற்றிலிருந்து த... கொள்ள அவனால் மு...

தன் சொந்தப் பாது... வும், சரண்சிங்கிடமிருந்... விடுவிக்கும் நோ... கொலை நடந்ததாக ... வாதாடினான். அ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளந்த படுகொலை (3)

# அகப்பட்டான்

1958ஆம் ஆண்டின் ஜன
தம் வழக்கு விசாரணை
கலாயிற்று.

தனக்கும், ஜயதேவ் கௌருக்கும் எந்த விதமான தொடர்போ, உறவோ இடையாதென்றும் கூறி

தான் என்பதையும் நீதிமன்றம் கவனத்திற் கொள்ளத் தவற வில்லை.

இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டே நீதிமன்றம் தனது தீர்ப்பை அளித்தது. தீர்ப்பில் பகவத்சிங்கிற்குத் தூக்குத் தண்டனைக்குப் பதிலாக ஆயுட் காலச் சிறைத் தண்டனை வழங்கப் பட்டது.

**ழகியும், ஆசிரியையுமாய் இருந்**
**தொடர்பின் விளைவால் அவ**
**ன சரண்சிங் அவளது முன்**
**உருவம் தெரியாத ஒருவனால்**
**றன். அவளது முதற் காதல**
**ன் ஆலோசனையும், துணையுங்**
**முறைப்பாடு செய்கிறாள். தனது**
**னால் வெறுக்கப்பட்ட கபீர் சிங்**
**இக் கொலையைச் செய்திருக்க**
**ள். இதன் பிறகு என்ன நடந்**
**க் கொலையை எப்படித் துப்புத்**
**த்தனர்? இவற்றை யெல்லாம்**
**ருங்கள்.**

பகவத்சிங் இத்தீர்ப்பை எதிர்த்துப் பஞ்சாப் உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்துகொண்டான். அப்பீலை விசாரணைக்கு எடுக்காமலே நீதிமன்றத் தீர்ப்பை உறுதிப்படுத்தி அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டது பஞ்சாப் உயர் நீதிமன்றம்.

இதற்கு மேலும் பகவத் சிங் கால் எதுவும் செய்யமுடியவில்லை. தனது வாழ்க்கையில் விதி விளையாடியதை எண்ணிப் பார்த்துக் கலங்கினான்.

காதல் வலையில் சிக்குண்டு அதன் விளைவால் தனக்கு ஏற்பட்ட கதியினை எண்ணி எண்ணிக் கலங்கினான். பகவத் சிங் தனது காதலியான ஜயதேவ் கௌர் தனக்கு மட்டுமே உண்மையான காதலியாக வாழ வேண்டும் என விரும்பினான். ஆனால் கௌரின் விருப்பமும் உணர்ச்சியும் வேறு விதமாக அமைந்து விட்டது. அதனால் கொலையும், பகவத் சிங்கிற்குக் கிடைத்த தண்டனையும் விளைவதற்குக் காரணமாகி விட்டன.

காதலில் போட்டியிட்ட த
ழந்த பொறுமை காரண
தான் சரண்சிங்கைப் பக
சிங் கொலை செய்ததாக
மீது பொலிஸார் குற்றஞ்
ார்.

னான். ஆனால் அவனது கூற்றை நீதி மன்றம் ஏற்க மறுத்து விட்டது.

ஜயதேவ் கௌர் வீட்டிற்கு பகவத் சிங் போனதற்குரிய கார

கொலை நடக்கும் சமயத்தில் கௌருக்குக் கொலை செய்தது யார் எனத் தெரிந்திருந்தும் அவள் தன் முதல் காதலனைக்காட்டிக் கொடுக்க முன் வராதது அவளது உள்ளத்தை யாராலும் எளிதில் உணர முடியாதிருக்கிறது.

பகவத்சிங்கின் கதை முடிந்தது. ஜய தேவ் கௌர் கலங்கினாள், கதறினாள். ஆயின் என்ன பலன்?

(முற்றும்).

(இந்தியப் பத்திரிகையில் வெளியாகிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இக் கொலை வழக்கு எழுதப்பட்டது. இதில் வரும் பெயர்கள் மட்டும் கற்பனை. -ஆ-ர்)



லிஸார் தமது குற்றச்
கு ஆதாரமாகக்
க்கு முன்பும், பின்பும்
சிங்கின் நடவடிக்கைகள்,
டங்கள் ஆகியவற்றைப்
வர்களது சாட்சியங்களை
ரத்தக் கறை படிந்த சட்
கிடந்த கை ரேகை அவ
கைரேகைதான் என்ற
நிபுணரின் சாட்சியம்
வ அனைத்தும் அவனுக்கு
மலை போல நின்றன.
லிருந்து தப்பித்துக்
ா அவனால் முடியவில்லை.

சொந்தப் பாதுகாப்பிற்காக
ரண்சிங்கிடமிருந்து தன்னை
க்கும் முயற்சியிலுமே
நடந்ததாக பகவத் சிங்
னான். அதே சமயம்

ணத்தை அவன் நீதி மன்றத்தில் கூற முடியாது போய் விட்டது. இதுவொன்றே அவனது தொடர்பை நிரூபிக்கப் போதுமானதாக அமைந்து விட்டது. பகவத் சிங் நீதியின் பிடியிலிருந்து தப்பிக்க முடியவில்லை.

சரண் சிங்கைக் கொலை செய்த வழக்கில் பகவத் சிங் குற்றவாளியே என்பதை நீதிமன்றம் ஒருமனதாக முடிவு செய்தது. ஆயினும் பொலிஸ் துறையில் மிகத் திறமைசாலியாகவும், எதுவித களங்கமற்ற முறையில் நல்லதோர் பெயருடன் ஆற்றிய சேவையைக் கவனத்தில் கொண்டும், தன் காதலியுடன் அவனுக்கு ஆத்திரத்தை கிளப்பி விடும் வகையில் சரண்சிங் இருந்

---

சோதிடம்

## இன்றைய பிறந்த நாள் பலன்

சென்ற ஆண்டு பல இன்பக் கதைகள் உங்களை ஆட்கொண்டிருந்திருக்கும், ஆனாலும் கசப்பான காலம்தான். இவ்வருடம் திருமணத்தின் மூலம் நீங்கள் பல சொத்துக்களுக்கு அதிபதியாவீர்கள். பிரகாசமான மாங்கல்ய பலன் உண்டு.

ஆனாலும் பல தோல்விகள் உங்களை வாட்டும் செல்வாக்கு குறையும், அவமானம் ஏற்படும். வியாபாரிகள் புதிய முதலீடுகளை தவிர்த்துக் கொள்வது அவசியம். பல கஷ்டங்கள் எதிர்பாராமல் வரும்.

மாணவர்கள் படிப்படியாக இலட்சியத்தை அடைவார்கள், அரசாங்கக் கட்டுப்பாடான தாபனங்களில் தொழில் செய்யும் ஊழியர்களுக்கு பல தீமைகள் நேரிடும்; அனேகமாக சூழ்ந்திருப்போரின் சதியினாலேயே உருவாகும்

கலைஞர்கள் இருட்டடிப்பு செய்யப்படுவார்கள

---

**ஈழமணி வெளிவருவதாக நாம் அறிவித்த நாளிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள வாழ்த்தும், வரவேற்பும் அளப்பரியது. நமது வாசகர்கள் தரும் உற்சாகம் எம்மை இன்னும் புதுமைகள் பலவற்றைச் செய்துகொண்டே இருக்கத் தூண்டுகின்றன. அளவில் சிறிதானாலும் விஷயங்களில் ஏராளம் கொண்டதுடன், எல்லாத் தினசரிகளையும் முந்திக் கொண்டு செய்திகளைத் தருவதிலும் ஈழமணி குறுகிய காலத்தில் முதலிடம் பெறுகிறது. இதோ எமது வாசகர்கள் கூறுபவை :**

# அன்புள்ள ஈழமணி

## கால் நூற்றாண்டுக் குறை நீங்கியது

ஈழத்தின் வரலாற்றில் தங்களின் "டைம்ஸ்" நிறுவனம் வகிக்கும் பங்கு மகத்தானது என்பதை வரலாற்றைக் கற்றவர்கள் அறிவார்கள். அது மட்டும் அன்றி சாதி மத வேலி கடந்து பத்திரிகா தருமப்படி இயங்கிய பெருமையும் தங்களின் நிறுவனத்தைச் சாரும்.

எனினும் தமிழ்த்தாய் கடந்த ஒன்றே கால் நூற்றாண்டாக இப்பாக்கியத்தைப் பெறாமல் இருந்துவிட்டாள். அக்குறையை இப்போதாவது போக்க முன்வந்தமையைத் தமிழ்கூறும் நல்லுலகம் மனம் உவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

"ஈழமணி" ஈழத்தின் மூலை முடுக்குகளெல்லாம் நிச்சயமாக பிரகாசிப்பான்.

வாழ்க ஈழமணி! வளர்க ஈழமணி!! எழுக ஈழமணி!!!

கந்தேச. எஸ். எல். எம். மவ்ரூப், பி. ஏ.

## தேவை புது விஷயங்கள்

ஈழத் திருநாட்டிலே வெளியிடப்படும் பல நாளிதழ் பத்திரிகைகளை படிக்கும் எனக்கு உங்களது தமிழ் தினசரிப் பத்திரிகையான "ஈழமணி" யின் முதல் இதழை சுவைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆமாம்—பொருத்தமான பெயர்—மணி மணியான செய்திகள். அமைப்பு சிறியதென்றாலும் அங்கு பல மணிச் செய்திகள் பரவிக்கிடக்கின்றன. ஈழமணி பத்திரிகையில் நீங்கள் இன்னும் பல புது அம்சங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை. அவை என்ன தெரியுமா?

"சினிமா ரசிகர்களுக்காக ஒரு "சினிமா ரசிகர் சங்கம்! பேனா நண்பர் பகுதி—"ஈழமணி பற்றிய ரசிகர் கருத்து" என்பனவற்றை சேர்ப்பீர்களா?

"ஈழமணி" பல சிறப்பம்சங்களுடன் தொடர்ந்து ஈழத்திருநாட்டிற்கு பல சேவைகள் புரிய வேண்டும் என இதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள வாசகன் என்ற ரீதியில் வாழ்த்துகிறேன்.

வாழ்க ஈழமணி! வளர்க அதன் சேவை!!

பலாங்கொடை ஏ. ஸி. அப்துல் ஸலாம்.

## சுவை தரும் மணி

ஜனவரி 1-ம் திகதி முதல் வெகு சிறப்பாக ஈழமணித் திரு நாட்டுக்கு ஒரு முத்தான தினசரி இதழாக "ஈழமணி" மலர்ந்ததைக் கண்டு நான் மட்டுமல்ல, நாட்டில் உள்ள அத்தனை மக்களும் மிக ஆவலோடும், மகிழ்ச்சியோடும் "ஈழமணி" யை வரவேற்கின்றார்கள்.

காரணம், இதில் அத்தனை அம்சங்களும் அடங்கி வெளிவருவது தான். உலகச் செய்திகள், தொடர் கதைகள், இஸ்லாமியர் பகுதி, சினிமாப்பகுதி, ஈழத்துச் சுடச் சுடச் செய்திகள், இன்னும் பல சுவையான அம்சங்கள் அடங்கி வெளிவருவது தான்.

வாசகர்களின் கருத்துக்களை தெரிவிப்பதற்காக ஒரு பகுதி இடம் பெற்றால் வெகு சிறப்பாக இருக்குமென நினைக்கிறேன். இந்த குறையை வெகு விரைவில் பூர்த்தி செய்து வாசகர்களை மகிழ்விக்கும் என எண்ணுகிறேன்.

வளர்க ஈழமணி! ஓங்குக அதன் புகழ்!!

எகலியகொடை கலீயன்பன் நிபாஸ்.

## நெஞ்சம் நிறை ஆசிகள்

தங்களது "ஈழமணி" இதழின் முதல் மலர் பார்த்தேன். இதழ்அகம் கமழ்ந்த தமிழ் மணம் கண்டு களித்தேன். கவிதை, கட்டுரை, சினிமாப் பகுதி ஆகிய சிறப்பம்சங்களுடன் தெவிட்டாத தீந்தமிழ்ச்சுவை பார்த்து இதயம் பூரித்தேன். மலர்ந்த சமயம் கமழ்ந்த மணமும், நிறைந்து பதிந்த அழகும் என்றும் குறையாமல் வளர்ந்து குவிந்து "ஈழமணி" மலர் வாழ்வதற்கும் புகழ் மிகப் பெறுவதற்கும் என் இதயம் கனிந்து நெஞ்சில் நிறைந்த ஆசிகளை மகிழ்வுடன் வழங்குகிறேன்.

"ஈழமணி" வாழ்க—வளர்க!

கொழும்பு—10 தலவின்னை. ஏ. றஹ்மான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மனைவிக்கும் ஏற்கனவே விஷயம் தெரியும்

# இரு பிள்ளைத் தந்தையை அவள் மணம் செய்தாள்

கண்டி ஜன, 10,

**"இவர் ஏற்கனவே இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பதை தெரிந்திருந்தும் இந்தப் பெண் இவரைத் திருமணம் செய்தாள். அதனால் அவர் இன்னொருத்தியுடன் தகாத முறையில் நடக்கிறார் என்று சுமத்தப் படும் குற்றச்சாட்டில் ஒரு விதமான விளக்கம் இல்லை."**

கண்டி நீதிபதி திரு. ஜோர்ஜ் அத்துறுபான முன் விசாரிக்கப் பட்ட சீவனாம்ச வழக்கொன்றில் பிரதிவாதித் தரப்பு வழக்கறிஞர் மேற்கண்டவாறு சொன்னார்.

திருமணமான தம்பதிகளுக் கிடையில் நடைபெற்ற இந்த வழக்கில் மனைவிக்கு குழந்தை கள் கிடையாது. சிறிது காலம் கணவன் தன்னைக் கைவிட்டுள் ளார். என்று கூறி மனைவி இந்த வழக்கைத் தாக்கல் செய்து சிவனாம்சம் கோரினார்.

மனுதாரர் தனது கட்டிய மனைவி என்பதை கணவன் ஒத் துக் கொண்டார்.

நீதிபதி: "அப்போ ஏன் மனை வியைப் பராமரிப்பதில்லை?"

மனைவியின் வழக்கறிஞர்: "அவர் இன்னொருத்தியுடன் சேர் ந்திருக்கிறாராம். இவரின் பேரில் அவளுக்கு இரண்டு பிள்ளைகளும் இருக்கின்றன!"

கணவனின் வழக்கறிஞர்: "இவளுக்கு ஏற்கனவே இரண்டு பிள்ளைகள் இருக்கும் விஷயம் தெரிந்தும் இப்பெண் இவரைத் திருமணம் செய்தாள். அதனால் அவர் இன்னொரு பெண்ணுடன் கள்ளத்தனமாக சேர்த்திருக்கிறார் என்று சொல்வது தவறு"

மனைவியின் வழக்கறிஞர்; "எனது நண்பர் சொல்வதில் இருந்தே கணவனுக்கும் இன் னொரு பெண்ணுக்கும் தொடர்பு இருப்பது வெட்ட வெளிச்சமாகி றது."

இரண்டு வழக்கறிஞர்களும் மேலும் சில காரணங்களை நீதி பதி முன் காட்டி வாதாடிய பின் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப் பட்டது.

## பொலீஸ் வலையில் சிக்கியது பயங்கர கொள்ளைக் கோஷ்டி

நீர்கொழும்பு, ஜன 10

கத்தி, வாள், பிஸ்டல்களைக் காட்டி பட்டப்பகலில்கொள்ளை யிடும் ஒரு கோஷ்டி நீர்கொ ழும்பு பொலிஸார் விரித்த வலையில் சிக்கியது. இளைஞர் கள் எட்டுப் பேர் இந்தக் கோஷ்டியில் அடங்குவர்.

இந்தக் கொள்ளைக் கோஷ்டி யைச் சேர்ந்த இன்னும் சிலர் தலை மறைவாகத் திரிவதாக நீர்கொ ழும்பு பொலிஸார் கூறினர். கொள்ளைக் கூட்டத்தினர் பிடிபட்ட சமயம் அவர்களிடம் ஸிரிஸ்கத்தி கள் இரண்டு மட்டுமே இருந்தன.

பயங்கர ஆயுதந் தாங்கிய இக் கொள்ளைக் கோஷ்டியினர் கடந்த சில மாதங்களாக நீர்கொழும்பி லும், நீர்கொழும்புக்கு அக்கம் பக்கத்திலேயுள்ள கிராமங்களி லும் பயங்கரமாகக் கொள்ளை யடித்து வந்தனர். இதனால் கிராம வாசிகள் பெரும் பீதியுடன் வாழ நேர்ந்தது. இப்போது இவர்கள் பொலிஸாரிடம் சிக்கி யுள்ள செய்தி கேள்விப்பட்டு இது வரையும் இருந்த பயம் தங்க ளுக்கு நீங்கியுள்ளதாக அக்கம் பக் கத்துக் கிராம வாசிகள் கூறுகின் றனர்.

இக்கொள்ளைக் கோஷ்டியினர் கடந்த இரு மாதங்களாக நீர்கொ ழும்பைச் சுற்றியுள்ள கிராமங் களில் இருபதுக்கும் மேலான கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித் தனர்.

சப்-இன்ஸ்பெக்டர் நந்தன ஏறலபொல தலைமையிலான பொலிஸ் கோஷ்டியொன்றின் சாமர்த்தியத்தினாலேயே கொள் ளைக் கோஷ்டி அகப்பட்டது.

தபால் ஊழியருக்கு

## 5 நாள் வேலை வேண்டுமாம்

கொழும்பு ஜன10

வாரத்துக்கு ஐந்து நாள் வேலைத் திட்டத்திலிருந்து தபால், தந்தி ஊழியர்கள் விலக்கப்பட்டிருப்பதற்காக தபால், தந்தி ஊழியர் சங்கம் பலத்த எதிர்ப்புக் காட்டியு டுள்ளது.

பொது பரிபாலன அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவுக் குசக்கத்தினர் அனுப் பியுள்ள தந்தி ஒன்றில், ஐந்து நாள் வேலை வாரத்துக்கு 1957ம் வருடம் தொட்டு முழக்கம் செய்த வர்கள் தாங்களே என்றும் அதனால் தங்களை இத் திட்டத்தில் இருந்து விலக்குவது தங்களுக்கு இழைக் கப்படும் அநீதி என்றும் கூறுகின் றனர்.

## இது ஒரு கீழ்த்தரமான கற்பழிப்பு என்றார் நீதிபதி

லண்டன் ஜன,10,

18 வயதுப் பெண்ணொருத் தியைக் கற்பழித்த 22 வயது பாகிஸ்தானிய டாக்டர் ஒரு வருக்கு ரீடிங் ராஜ்ய நீதி மன்றத்தில் 10 வருட சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

பாகிஸ்தானைச் சேர்ந்த அப்துல் காலித் என்பவரே இவ்வாறு குற்றம் புரிந்தவர். அவருக்கு உதவி செய்த 24 வயதான முஹம்மது சாதிக் என்பவருக்கு ஏழு வருட சிறைத்தண்டனை விதி க்கப்பட்டது.

இச் சம்பவம் பற்றிக் கூறப்பட்ட தாவது.

வழியில் கண்ட இரண்டு பெண் களை அவர்கள் செல்லும் இடத் துக்குக் கொண்டு போய் விடுவ தாக ஒத்துக்கொண்டு தங்கள் காரில் ஏற்றிக் கொண்டுள்ளனர் இவர்கள் இருவரும். பின்னர் பக்ஸ் என்ற சிறு நகரத்திலுள்ள [illegible] என்ற இடத்தில் 18 வயதான இளம் பெண்ணை காரில் இருந்து வெளியே இழுத்துள் ளார். அதன் பின் கீழே புற்ற ரையில் கிடத்தி அவளைப் பலாத் காரமாகக் கற்பழித்துள்ளார். மற்றப் பெண் தனது தோழிக்கு உதவி செய்ய முயன்ற போது சாதிக் அவளைத் தாக்கி அவ்வாறு உதவி செய்யாது தடுத்திருக்கிறார்.

காலித்துக்கு தண்டனை விதித்த சமயம் நீதிபதி மெல்பர்ட் ஸ்டீ வன்சன் பின் வருமாறு கூறி னார்.

"இது மிகவும் கீழ்த்தரமான கற்பழிப்பு."

## புதிய இலங்கை தூதர்

புதுடில்லி, ஜன 10

இந்தியாவில் புதிய இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு ஜெஸ்டின் சிறிவர்தன ஜனா திபதி கிரியிடம் தன் நியமனப் பத்திரங்களைக் கையளித்தார்.

## இச்சைக் குளிசை வழங்கி தன்இச்சைபூர்த்தியாக்கினார்

லண்டன், ஜன10

இளம் பெண்ணொருத் திக்கு காம இச்சை கொடுக் கும் குளிசைகளைக் கொடுத்து அதற்குப் பதிலாக தனது இச்சையைப் பூர்த்தி செய்து கொண்ட இந்திய டாக்டர் ஒரு வருக்கு இங்குள்ள நீதிமன் றம் ஒன்றினால் சிறைத் தண் டனை அவிக்கப்பட்டது.

இரண்டு குழந்தைகளுக் குத் தந்தையான 42 வயது டாக்டர் டி. நாராயணன் என் பவரே இவ்வாறு தண்டிக்கப் பட்டார்.

இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை டாக்டர் மறுத் தார்.

லண்டனில் உள்ள ராஜ்ய கான்வென்டரி நீதிமன்றத் திலேயே டாக்டர் நாராயணன் மீதான வழக்கு நடைபெற் றது.

குறிப்பிட்ட பெண்ணுடன் பத்துத் தரம் தனது ஆசை யைப் பூர்த்தி செய்து கொண்ட டாக்டர் நாராயணன் அதன் பின் அவள் கேட்ட குளிசைகளைக் கொடுத்திருக் கிறார்.

தெரேசா புரம்வெல் என்ற 22 வயதுள்ள இப்பெண்ணுக் கும் இன்னும் இருவருக்கும் தடை செய்யப்பட் டுள்ள பிரஸ்தாப இச்சைக் குளிசைகளைப் பெற தான் உதவி செய்ததாக மட் டும் டாக்டர் நாராயணன் நீதி மன்றத்தில் ஒத்துக்கொண் டார். தன்னைப் பயமுறுத்திய தால் புரம்வெல்என்றஇந்தப் பெண்ணுக்கும் அவளுடைய தமையனுக்கும் இன்னொரு 17 வயதுப் பெண்ணுக்கும் தான் குளிசைகளைக் கொடுத் ததாக கான்வென்டரி யி லுள்ள பிரின்ஸ் ஒப்வேல்ஸ் ரோட்டைச் சேர்ந்த டாக்டர் நாராயணன் விசாரணை முடி வின் போது ஒத்துக்கொண் டார். இவருக்கு ஒரு வருட காலம் சிறைத் தண்டனை விதிக்கப்டது.

## இந்திய டாட்டா கம்பெனி இ. போ. சவுடன் ஒப்பந்தம்

கொழும்பு ஜன 10

உதிரிப்பாகங்கள் இல்லாது பாதையை விட்டு விலகியிருக் கும் சுமார் 1200பஸ்கள் புதுப் பிக்கப்பட்டு வருகிற ஏப்ரல் மாதமளவில் மீண்டும் பிர யாணிகளின் பாவனைக்கு வரும்.

இலங்கையில் உற்பத்தி செய் யப்பட முடியாத பஸ்களுக்கான டயர், டியூப்புகள் மற்றும் உதி ரிப்பாகங்களை உடனடியாக பிற நாடுகளில் இருந்து வரவழைத்து ஓடமுடியாமல் நிற்கும் பஸ்க ளுக்கு பொருத்துவதற்கு இலங் கைப் போக்குவரத்துச் சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தியாவின் பிரபல மோட் டார் வாகன உற்பத்திக் கம்பெனி யான டாட்டா பஸ் கம்பெனியுடன் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஒப்பந்தம் ஒன்றைக் கைச் சாத்திடவுள்ளது. இந்த ஒப்பந்தத் தின்படி இலங்கையில் உற்பத்தி செய்யப்படும். உதிரிப்பாகங்களை டாட்டா கம்பெனியாருக்குக் கொடுத்து இவற்றுக்குப் பதில் புத்தம் புதிய பஸ்களைப் பெறுவ தற்கு இந்த ஒப்பந்தத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இலங்கையில் இந்த உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்வதும் டாட்டா கம்பெனியாரின், ஒத்து ழைப்புடன் நடைபெறும்.

பொதுசன போக்குவரத்து வசதியை அதிகரிக்கும் நோக்கத் துடன் சென்ற வருடம் இ. போ. ச வுக்கு அரசாங்கம் வழங்கிய அந்நிய செலாவணியைவிட இந்த வருடம் இரண்டு மடங்கு அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

## ஆசிரியையின் தாலியைப் பறித்தவர் பிடிபட்டார்

மாத்தளை, ஜன. 10

பாடசாலை ஆசிரியை ஒருவ ரின் தாலிக் கொடியை திரு டிய நபர் பொலீஸில் கையும் மெய்யுமாக அகப்பட்டுக் கொண்டார்.

இச் சம்பவம் மாத்தளைப் பகுதி யில் நடைபெற்றது. இதுபற்றிக் கூறப்படுவதாவது.

மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் ஆசிரியையான திருமதி [illegible]. யோகநாதன் என் பவளை, சுமார் 2,500 ரூபா பெறு மதியான தாலிக்கொடியை வீதி யால் சென்று கொண்டிருக்கை யில் ஒரு நபர் அறுத்துக்கொண்டு ஓடினாராம்.

தாலிக்கொடியை பறிகொடுத்த ஆசிரியை கூச்சலிட்டு களவாடிச் சென்ற நபரைப் பிடிப்பதற்கு உதவினார். இது சம்பந்தமாக சந் தேக நபர் ஒருவர் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். களவா டப்பட்ட தாலிக்கொடியும் மீட்கப் பட்டது.

## இன்சூரன்ஸ் கூட்டுத்தாபன பிரிவு 4க்கு பொலீஸ் சீல்!

கொழும்பு, ஜன. 10

இன்சூரன்ஸ் கூட்டுத்தாப னத்தில் நடைபெற்றுள்ளதா கக் கூறப்படும் பெரிய மோசடி ஒன்றை அடுத்து விசாரணை முடியும்வரை கூட் டுத்தாபனத்தின் சீவிய சட்ட உத்தரவாதப் பிரிவை (யூனிட் 4) பொலிஸார் சீல் வைத்து மூடியுள்ளனர்.

நடைமுறையில் செல்லுபடி யாகாத உறுதி ஒன்றின்மூலம் உறுதிச் சொந்தக்காரருக்கு கடன் பணம் பெற்றுக் கொடுப்பதற்காக கூட்டுத்தாபனத்தின் லிகிதர் ஒரு வர் 1000 ரூபா லஞ்சமாகப் பெற் றார் என்றும், இந்த லஞ்சக் கைமாறலின்போது குறிப்பிட்ட லிகிதர் லஞ்சக் கமிஷனர் இலாகா வால் பிடிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

இந்த மோசடி பற்றி சி. ஐ. டி. தீவிர புலன் விசாரணையில் ஈடுபட் டுள்ளது. அத்தோடு சந்தேக நப ரான லிகிதர் கைது செய்யப்பட் டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள் ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சமய சஞ்சிகை

## திருவாதிரையும் திருவெம்பாவையும்

இ. சுப்பிரமணிய சர்மா

தமிழ் மக்களின் வாழ்வில். சில விழாக்களும், பண்டிகைகளும் புராணகாலந் தொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அவ்விழாக்களில் மார்கழி மாதத்திலே தோன்றும் திருவாதிரை விழாவும் ஒன்றாகும்.

மற்றைய திங்கள்களில் தோன்றும் விழாக்களிலும் மார்கழி மாதத்தில் தோன்றும் விழாவுக்கு ஒரு விசேட மகிமையுண்டு இத்தினங்களில் கோயில் வழிபாடு புத்துயிர் பெற்றது போன்று வீதிக்கு வீதி பஜனைக் கோஷ்டிகள் பவனி வருகின்றன. அதிகாலையில் பெண்கள் தங்கள் வீட்டு முற்றங்களில் அழகழகான வண்ணக் கோலங்களிட்டு அலங்கரிக்கின்றார்கள்.

### திருவாதிரை

திருவெம்பாவையும் திருப்பாவையும் இம்மார்கழி மாதத்திலேயே தொடங்குகின்றது. மார்கழி மாதம் பக்திக்குரிய மாதம் என்று இதிலிருந்து தெளிவாகின்றது. திருவாதிரையன்று இறைவனின் நடனத்திருக்கோலத்தைத் தரிசிக்க சிவஸ்தலங்களை இந்துக்கள் நாடுகின்றார்கள். இந்நாளை ஆதிரை என்றும் ஆருர்த்திரா தரிசன நாள் என்றும் வழங்குகிறார்கள்.

### ஆருர்த்திரா

ஆருர்த்திராஎனும் வடமொழிச் சொல் கால வெள்ளத்தில் மருவி ஆதிரை என்று திரிந்து தமிழின் சிறப்புச் சொல்லான “திரு” எனும் அடைமொழி பெற்று திருவாதிரை என்று வழங்கப்படுகின்றது.

ஆருர்த்திரா என்பதற்கு தமிழில் சிவந்த நிறம் என்று பொருள்படும். திருவாதிரை நட்சத்திரம் செந்நிறமான நட்சத்திரங்களின் ஒன்றாகும். அந் நட்சத்திரத்தின் வெம்மையைக் குறிக்கும் செந்நிறமான திருவாதிரை நட்சத்திரம் அக்னி வடிவமாகிய சிவ ஜோதியையே நினைவூட்டுகின்றது.

இத் திருவாதிரை சிவஜோதியானசிவபெருமானுக்கே உரியது. ஆதலால் சிவன் பள்ளி கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவன் கோவில்கள் தோறும் இவ்விழாக் கொண்டாடப்படுகின்றது. விசேடமாக தென் இந்தியாவிலுள்ள சிதம்பரத்தில் இவ்விழா கோலாகலமாகக்கொண்டாடப்படுகின்றது.

சிவபெருமானுக்குரிய இத் தினத்தன்றே உலகின் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முப்பெரும் தொழிலினைப் புரியும், “பிறவா யாக்கை பெரியோன்” எனப் பெயர் பெற்றிருக்கும் பரம்பொருளான இறைவன் பிறந்தருளினான் என்று கூறுவோரும் உள்ளனர். ஆனால் இக் கூற்று அறியாமையினாலேயே தோன்றியது. என்று எதிர்வாதம் செய்வோரும் உளர்.

### நடராஜ தத்துவத்தின் உட்பொருள்

எங்கும் பரந்து வியாபித்திருக்கும் பரம்பொருளான இறைவன் படைத்து காத்து அழித்து விடுதலையினை அருளுவதுதான் நடராஜ தத்துவத்தின் உட்பொருள்என்று சிவபுராணங்கள் கூறுகின்றன. இத்தத்துவத்தை அன்பினாலும் அவன் அருளாலுமேயன்றி அறிவினால் உணர முடியாது என்பதற்கு நந்தனார் சரித்திரம் சான்று பகருகின்றது.

அறிவிலே உயர்ந்தவர்களும், செல்வச் சீமான்களும், ஜாதியிலே உயர்ந்த இடம் வகிப்போரும் காணமுடியாத இத்தத்துவத்தை சாதியிலே குறைந்த புலையன் நந்தனார் கண்டு கொண்டார் என்றால் அதன் மகத்துவம்தான் என்ன.?

திருவாதிரை என்றதும் நந்தனார் சரித்திரம் தான் பக்த சிரோன் மணிகளின்கண்முன்னே நிற்கும். அவன் அன்பினாலும் அருளின் சக்தியினாலும் ஆடியும் பாடியும் ஆனந்தமாக அந்த அருளை நாடிப் பெற்றான் என்பதற்கும் ஐய முண்டோ? இதிலிருந்து அன்பின் சக்தியினையும் அருளின் தன்மையினையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகவே நாம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளைக் கேட்டுப் பரவசமாகும் பொழுது திருவாதிரையின் சிறப்பினை, மகத்துவத்தை உணர்ந்து கொள்கின்றோம்.

இந்து சமயத்தவர் ஆருர்த்திரா தரிசன தினத்தன்று நடராஜப் பெருமானுக்கு “களி” சமைத்து உண்பர். அதனைத் திருவாதிரைக் களி என்பர்.

புராண காலத்தில் சேந்தனார் என்னும் நடராஜ பக்தர் இருந்தார். அவர் சிதம்பரத்திற்குப் பொருள் தேடச் சென்று, விறகு விற்ற பணத்தைக் கொண்டு சிவனடியார் ஒருவரைத் தினமும் போஷித்து வந்தார். ஒருநாள் திருவாதிரையன்று பெருமழை பெய்த காரணத்தினால் இவரது ஈர விறகினை வாங்குவாரில்லை. அதனால் அவர் பண்டமாற்று முறையில் விறகிற்குப் பதில் ஓரளவு அரிசி மாவைப் பெற்றுக் கொண்டார். பின் அரிசிமாவைக் கொண்டு களி சமைத்து நடராஜப்பெருமானுக்கு நிவேதித்தார். பின் தான் சாப்பிடுவதற்கு முன்பு சிவனடியார் ஒருவரைப் போஷிக்க வேண்டுமென்று கருதிய பொழுது நடராஜப் பெருமான் வயது முதிர்ந்த ஓர் அந்தணனாக வந்து களியினைச் சாப்பிட்டு மீதிக் களியினையும் எடுத்துக் கொண்டு கோயிலினுட்சென்று மறைந்தருளினார். அவர் கொண்டு சென்ற களி கோயில் வாசலில் சிதறிக் கிடந்ததைக் கண்டு ஏழைகள் அதைப் பொறுக்கி உண்டனர். அன்றிலிருந்து திருவாதிரையன்று “திருவாதிரைக் களி” சமைக்கும் வழக்கம் தோன்றியது. இன்றும் இல்லங்கள் தோறும் களி சமைத்து உண்பதை நாம் காண்கிறோம்.

### திருவாதிரைக் களி

இத் திருவாதிரைக்கும் திருவெம்பாவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பது மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவைப் பாசுரங்கள் கோயில்கள் தோறும் பாடப்படுவதிலிருந்து நாம் அறிகிறோம். மார்கழிமாதத்தில் தோன்றிய இவ்விழாக்கள் காலவெள்ளத்தால் அழியாது இன்றும் அனுஷ்டிக்கப்படுவதிலிருந்து நாம் விசேடமாகச் சிவனை வழிபடும் சைவர்கள்—இந்துக்கள் பாக்கியம் செய்தவர்களாவோம்.



யோகி மகரிஷி மகேஷின் சமீபத்திய படம்



மிழகத்தில் மதுரை மாநகரின் பிரசித்தி பெற்ற ஆலயத்தின் தோற்றம். இதன் கோபுரம் தமைவரோர் கண்களையும் ஈர்க்கும் தன்மையுடன் மிகவுயர்ந்து விளங்குகிறது.

## மகரிஷி மகேஷின் மதத் தொண்டு

நாத்திக வாதம் தலைதூக்கி உலகில் அரக்கத் தனம் தலைவிரித்தாடினாலும் ஆத்மீகத்தின் புத்துணர்வு ஆங்காங்கே விழித்துக் கொண்டு தானிருக்கிறது. இந்து சமயத்தின் பெருமையையும், பாரம்பரியத்தையும் நம் நாட்டினரும் பார்க்க மேலைநாட்டினர் தான் வளர்க்கிறார்கள் என்பது இன்று பரவலான ஒரு கருத்து.

மேல் நாட்டில் இந்து சமயத்தின் பெருமைகளை உணரவைத்தவர்களில் மகரிஷி மகேஷ் அவர்கள் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கிறார். இவர் இமாலயத்தில் உள்ள ரிஷிகேசத்தில் ஒரு குடிசையில் வாழ்கிறார்.

இவரது பெருமையை, இந்தியாவிலோ, மேலை நாடுகளிலோ முதலில் உணரவைத்தவர்கள் “பீட்டில்ஸ்” எனக் கூறப்படும் பிரபல பாடகர்களாவர்.

ஆன்மீக தாகம் கொண்டு, இந்தியாவுக்கு வந்த இப் பாடகர்களை தமது தியான சமாதி மூலம் சாந்தியளித்தார். இத்தகைய சாதனைகளால் கவரப்பட்ட மேலை நாட்டினர் இன்று ரிஷிகேஷத்திற்குப் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல சமீபத்தில், இவரது மேலைநாட்டுச் சீடர்கள் சிலரால் ஜெட்விமானம் ஒன்றும் இவருக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது. இவரை “ஜெட்யுக” மகரிஷி என்று மேலை நாட்டினர் அழைக்கிறார்கள்.

உலகம் பூராவும் தம் சீடர்களுடன், மதத்தொண்டு செய்து வந்த இம் மகரிஷி, ஒரு விஞ்ஞானப்பட்டதாரியென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நேரு பல்கலைக் கல்லூரியில் பயின்ற இவர் தம் சீடர்களைத் தொண்டு செய்வதற்குப் பணித்துவிட்டு இமாலய சிகரத்தில் தியானம் செய்து மிகுதிக் காலத்தை முடித்துவிடப் போவதாகச் சமீபத்தில் கூறினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமணி
EELAMANI

11—1—1974. வெள்ளிக்கிழமை

## சனிக்கிழமை ரயில்கள் பல ரத்தாகும்

அரசாங்கத்துறையிலும், தனியார்துறையிலும் வாரம் 5 நாள் வேலை அறிமுகப்படுத்தும் யோசனையை அடுத்து நாடு பூராவுக்குமான புதிய ரயில் போக்குவரத்து அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

சனிக்கிழமைகளில் ஓடும் காலை ரயில்களிலும், பகல் ரயில்களிலும் பெரும்பாலானவை ரத்துச் செய்யப்படலாம் என போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் அறிவித்தன.

அதற்குப் பதிலாக வேலை நாட்களில் குறைந்த அளவான ரயில்கள், அதிக பெட்டிகளுடன் ஓடும் என்றும் கூறப்பட்டது.

ஆனால் உடனடியாக ரயில் கட்டணத்தை கூட்டும் நோக்கம் இல்லை என அவர்கள் தெரிவித்தனர்.

# பொன் அருணாசலத்தின் 50 வது சிரார்த்த ஆண்டில்

## தமிழ்ப் பகுதி பல்கலைக்கழக பிரிவுகள் அமையும்

—அமைச்சர் மைத்ரி

கொழும்பு, ஜன. 10

வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் மூன்று பல்கலைக் கழகங்களைப் பெப்ரவரி மாதத்திலேயே ஆரம்பித்து விட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ஐக்கிய முன்னணி அரசாங்கம், சேர் பொன் அருணாசலத்தின் பெரிய அபிலாஷை ஒன்றை அன்னாரது 50 ஆவது சிரார்த்த ஆண்டில் நிறைவு செய்து மகிழ்கிறது.

நீர்ப்பாசன மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் சிராத்த தினத்தை யொட்டி தேசிய அரசுப் பேரவையின் முன்றலில் உள்ள அன்னாரது சிலைக்கு மலர் மாலை சூட்டிப் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சேர் பொன். அருணாசலம் 1915ம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட குழப்பங்களின்போது சிங்களச் சகோதரர்களுக்குச் செய்த சேவையை அவர்கள் என்றும் மறக்கவே முடியாது. இதற்காக சிங்கள மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

சேர் அருணாசலம் அவர்கள் தேசிய விடுதலைக்கு முக்கிய கருவியாக வாழ்ந்தவர். இந்த நாடு இன்று பூரண சுதந்திரம் பெற்ற ஒரு குடியரசு நாடாக மலர்ந்துள்ளதையிட்டு முதலில் பெருமை அடைபவர் அவராகவே இருப்பார்.

சேர் பொன். அருணாசலம் அவர்கள் 1918ம் ஆண்டில் ஒற்றுமையான ஒரு நாட்டைத் தோற்றுவிக்க விடுத்த வேண்டுகோள் ஒன்றை இன்றைய அரசியல்வாதிகள் நன்கு உணரவேண்டும்" என்று அமைச்சர் கூறி அவர் விடுத்த வேண்டுகோளின் ஒரு பகுதியை வாசித்துக் காட்டினார்.

விழாவில் அமைச்சர் குமாரசூரியர் பேசியதாவது:

சேர் பொன். அருணாசலம் இந்நாட்டின் சகல இன மக்களும் ஒரே குடும்பத்தினராக ஏற்றத் தாழ்வு இன்றி வாழவேண்டும் என்று விரும்பியவர்.

இன்றுள்ள சில தமிழ் அரசியல்வாதிகள் தமக்கு ஏதோ ஒரு பிராந்தியத்தில்தான் உரிமை உண்டு. அங்கு நாம் ஆட்சி புரிய வேண்டும் என்று கடந்த கால் நூற்றாண்டுகளாக தமது அரசியலை நடத்தி வருகிறார்கள்.

இலங்கையின் ஒவ்வொரு அங்குலமும் அவரது நாடாகவே சேர் பொன். அருணாசலம் அவர்கள் நேசித்தார். பரந்து வாழ்ந்து எமது உரிமைகளைப் பெற வேண்டும்–அனுபவிக்க வேண்டும் என்று உணர்த்தியவர் அவர்.

பொன். அருணாசலம் அவர்கள் திருமுருகாற்றுப் படையில் செய்த ஆய்வுபோல் இன்றுள்ள தமிழ் படித்த பண்டிதர்களாலும் ஆற்ற முடியாது. எவருமே கை வைக்க அஞ்சும் விஷயத்தை எல்லாம் சிறப்பாக நிறைவேற்றியவர் சேர் பொன். அருணாசலம் அவர்கள்.

சேர் பொன். அருணாசலம் அவர்களின் சிலைக்கு பல்வேறு சமய ஸ்தாபனங்களும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உடுவில், உடுப்பிட்டி, கோப்பாய் பகுதிகளின் அமைப்பாளர்களும் இஸ்லாமிய சோசலிச முன்னணியின் சார்பில் ஜனாப் எச்.எம்.பி. மொஹிதீனும் மலர்மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.



யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற அலங்கார ஊர்வலத்தை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கண்டு களிக்கும் காட்சி.

## "தமிழ் பூத்துக் குலுங்குவதை யாழ்ப்பாணத்தில் கண்டேன்"

ஜனார்த்தனன்

யாழ்ப்பாணம், ஜன. 10

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள்தான் பூர்த்தியாகியுள்ளன. ஆனால் இக்காலத்தில் தமிழ் பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. அன்று மலேசியாவில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் ஆராய்ச்சி மாநாடு இன்று யாழ்ப்பாணத்தில் பூத்துக் குலுங்குவதை நான் காண்கிறேன். இது தமிழ் விழா மட்டுமல்ல தமிழர் வெற்றி விழாவும் கூட.

இவ்வாறு டாக்டர் இரா ஜனார்த்தனன் கடந்த புதன்கிழமை பத்திரிகையாளர் மத்தியில் பேசும்போது குறிப்பிட்டார்.

அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு சம்பந்தமாக நடைபெற்ற அலங்கார ஊர்தி பவனியில் கலந்து கொண்ட அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்: தமிழ், மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டின்மூலம் மலர்ந்தது. அங்கிருந்து தமிழகம் சென்று அது கமழ்ந்தது. பாரிஸ் மாநகரத்தில் மணம் பரப்பி புகழ் ஈட்டியது. இன்று ஈழம்வாழ் தமிழர்களின் தலைநகரமாம் யாழ்ப்பாணத்தின் தமிழன் என்றும் கண்டிராத விழாவாக அது அமைந்துவிட்டது" என்றும் சொன்னார்.

இதுவரை நடைபெற்ற நான்கு மாநாடுகளிலும் சிறந்தது எது வெனக் கேட்டதற்கு "அதில் சந்தேகம் என்ன? யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது போன்று எந்த விழாவும் அமையவில்லை" என்றார்..

தமிழ் உலகெல்லாம் பரந்துவிட்டதென்பதை இன்று நிரூபிக்கும் வகையில் இம்மொழி 30 பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்பட்டு வருகிறது. உலக அறிஞர்கள் பலர் இம்மொழிபற்றி ஆராய்ச்சி நடத்துகிறார்கள். இவை மட்டுமே இதன் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன" என்றும் அவர் மேலும் சொன்னார்.

எஸ். சி. ஒவின்
சிமிட்டி சுப்பர்



மக்கள் கமிட்டிகளால் உணவு பங்கிடப்படும்.

—செய்தி

ஹா!...ஹா!!...இது நரியிடை கோழியைக் கொடுப்பது போல் அல்லவே இருக்கு!

## விமானக் கட்டணம் 6 சத விகிதத்தால் உயரலாம்

எண்ணெய் விலை உயர்வு காரணமாக விமானப் பிரயாணிகள் அதிகக் கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும்.

இலங்கை வழியாகப் பறக்கும் எல்லா விமானங்களும் ஒவ்வொரு பிரயாணியின் டிக்கெட்டுக்கும் 6 சத விகித அதிக கட்டணம் வசூலிக்க வேண்டுமென பணிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஜனவரி 15ம் திகதிக்கு முன் பிரயாணம் செய்வதற்காக ஜனவரி 1ம் திகதிக்கு முன் டிக்கட் வாங்கியவர்களுக்கு இவ் விஷயத்தில் சலுகை அளிக்கப்படும்.

பிரயாணிகளுக்கு மேலும் தொல்லை கொடுக்கக் கூடாது என்ற காரணத்திற்காகவே இந்தச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதாய்க் கூறப்பட்டது.

ஜனவரி 1ம் திகதிக்குப்பின் டிக்கெட் வாங்கியவர்கள் மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

வெளிநாட்டுச் செலாவணியில் இக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

## ஞானானந்தர் ஜயந்தி

கொழும்பு ஜன, 10.

பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின் பிறந்த தினத்தை கொழும்பில் மிக சிறப்பாக கொண்டாட சுவாமிகளின் இலங்கை வாழ் பக்தர்கள் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

... லிமிட்டெட்டாரால் கொழும்பு கோட்டைபிரிஸ்டல் வீதி 3-ம் இலக்க "டைம்ஸ்" கட்டிடத்தில் 1974, ஜனவரி 11-ம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media